WLC15-1-3-TA

# தேவன் இருக்கிறாரா?: தேவன் இருக்கிறார் என்பதை பற்றிய விவாதம் - நிகழ்ச்சி 3

அறிவிப்பாளர் : இன்றைய ஜான் அங்கேர்பெர்க் நிகழ்ச்சியில், தேவன் இருக்கிறாரா? சமீபத்திய ஆய்வறிக்கையின்படி அமெரிக்கர்களில் ஐந்தில் ஒருவர் தன்னை நாத்திகனாக, இறைநம்பிக்கை அற்றவராக ஒன்றிலும் பங்கில்லாதவராக கருதுவதாக கூறப்படுகிறது. ஒருவேளை நீங்கள் கூட கேட்கலாம், "தேவன் இருக்கிறாரா" தேவன் இருக்கிறார் என்பதற்கான தத்துவார்த்த ஆதாரம் அறிவியல் ஆதாரம் என்ன? இன்றைக்கு இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க இருக்கும் எனது விருந்தினர் ஆராய்ச்சி நிபுணர் தத்துவ மேதை Dr. வில்லியம் லேன் கிரேக் பலரும் அவரை தங்கள் தலைமுறையின் முன்னணி கிறிஸ்தவ சித்தாந்த மேதை என்று கருதுகின்றனர், உலகம் முழுவதிலும் உள்ள பிரசித்திபெற்ற பல்கலைகழகங்களில் நடக்கும் நாத்திகர்களுடனான விவாதங்களில் பங்குபெறுபவர். Dr. கிரேக் இங்கிலாந்தின் பர்மிங்காம் பல்கலைகழகத்தில் தத்துவ பாடபிரிவில் Ph. D பட்டம் பெற்றவர்; மேலும் முனிக் பல்கலைகழகத்தில் இறையிலில் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார். அவர் டல்போத் இறையியல் பள்ளியில் ஆராய்ச்சி தத்துவ பேராசிரியராக பணியாற்றுகிறார். மேலும் resonablefaith.org யின்

நிறுவனராக இருக்கிறார். Dr. கிரேக் இறையியல் மற்றும் சிந்தாந்த தத்துவத்தை பற்றி பல நூற்றுகணக்கான கட்டுரைகளையும் 30ற்கும் மேற்ப்பட்ட புத்தகங்களையும் தொகுத்து வழங்கியிருக்கிறார். அவருடைய புத்தகங்களில் பிரசித்திபெற்ற இரண்டு புத்தகங்கள் ரிசனபில் பெயித் மற்றும் ஆன் கார்ட். இன்றைக்கு ஒரு கேள்வியுடன் துவங்கிட இருக்கிறோம், "தேவன் இருக்கிறார் இல்லை என்பது எத்தகைய வித்தியாசத்தை உண்டாக்குகிறது?

இன்றைக்கு நாம் பார்க்க இருக்கும் கேள்வி தேவன் இருக்கிறார் என்பதற்கு இந்த பிரபஞ்சத்தின் துவக்கம் வலுவான ஆதாரமாக இருப்பது ஏன்.

**டாக்டர் வில்லியம் லேன் கிரேக்**:..இந்த விவாதம் எளிமையாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. உதாரணம் ஒன்று என்னவென்றால் ஒவ்வொன்றின் துவக்கத்திற்கும் ஒரு காரணம் உண்டு. இரண்டாவது இந்த பிரபஞ்சத்தம் நிலைபெற்றிருப்பது. இந்த இரண்டு காரியங்களில் இருந்து உருவான, மூன்றாவது, காரணம், இந்த பிரபஞ்சத்திற்கு ஒரு காரணம் உண்டு.

**அறிவிப்பாளர்:** ஏன் இந்த எளிமையான விவாதத்திற்கு திடமான சித்தாந்த தாக்கமும் அறிவியல் ஆதரவும் உண்டாயிருக்கிறது, இந்த விவாதங்களால் ஏன் ஒருவர் தேவன் இருக்கிறார் என்ற முடிவிற்கு வருகிறார்கள்? இந்த விசேஷித்த நிகழ்ச்சியின் தொகுப்பை காண வரவேற்கிறோம் இது தி ஜான் அன்கெர்பேர்க் நிகழ்ச்சி.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நான்தான் ஜான் அன்கெர்பேர்க். எனது விருந்தினரான சிந்தாந்த மேதை Dr. வில்லியம் லேன் கிரேக், மற்ற சித்ததாந்த மேதைகளின் மத்தியில், தம்முடைய அயராத உழைப்பினால், கிழக்கத்திய உலகில் சித்தாந்தத்தை கையாளும் முன்னணியாளர்களில் முதல் இடத்தில் இருப்பவர் இவர்தான். நீங்கள் இதை பற்றி ஒரு நிமிடம் சிந்தித்து பாருங்கள். அப்படிப்பட்ட நபரை தான் இன்றைக்கு சந்திக்க இருக்கிறீர்கள். நாம் ஒரு முக்கிய கேள்வியை ஆராய்ந்திட இருக்கிறோம்: தேவன் இருக்கிறார் என்பததற்கு ஆதாரங்கள் இருக்கிறதா? மேலும் Dr. கிரேக் நம்புகிறார் இந்த பிரபஞ்சத்தின் நிலைப்பாடு இந்த உண்டாக்கிய தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதற்கு வலுவான ஆதாரமாக இருக்கிறது என்கிறார்.

சரி, நேயர்களே, நீங்க ஆன்லைன்ல போய் பில் கிரேகின் பெயரை டைப் செய்து உலகத்தை குறித்த விவாதங்களை ஆராய்ந்து பாருங்கள், அதில் நீங்கள் நாம் இன்றைக்கு பேசப்போகிற காரியங்களை நவீன உலகின் நிலைக்கேற்ப முதன் முதலில் வடிவமைக்கப்பட்ட இவரது புத்தகமான காலம் உலகத்தை குறித்த விவாதம் 1979ல் வெளியிடப்பட்டிருப்பதை காண முடியும். நீங்கள் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும் மைக்கேல் மார்டின், முன்னாள் பாஸ்டன் பல்கலைகழகத்தை சேர்ந்தவர்; ஒருமுறை கிரேகின் புதுப்பிக்கப்பட்ட

விவாதங்கள் அனைத்தும் இன்றைய நிலைக்கு ஏற்றவாறு கூறப்பட்டிருக்கும் இறையியல் சிந்தாந்தங்கள் என்று கூறியிருக்கிறார்." இவர் 1979 ஆம் ஆண்டு வெளியிட்ட விவாதத்தை குறித்த பல கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கிரத்தை காண முடியும், அந்த காலத்தில் இருந்து, இதைவிட அதிகமான சிந்தாந்த விவாதங்களை பார்க்க வில்லை. மேலும், Dr. கிரேக், இன்றைக்கு நீங்கள் எங்களோடு இருப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

சரி, நேயர்களே, தேவன் இருக்கிறார் என்ற விவாதத்தை உங்களுக்கு எளிமையாக விளக்கி சொல்லும் ஒரு வீடியோ கிளிபுடன் நிகழ்ச்சியை துவங்கும்படி விரும்புகிறேன். இந்த வீடியோவை Dr. கிரேகின் நிறுவனத்தினர் தயாரித்திருக்கிறார்கள், reasonablefaith. org, இதை நீங்களும் காண விரும்புகிறேன்.

**அறிவிப்பாளர்:** தேவன் இருக்கிறாரா? அல்லது நாம் காண்கிற இந்த உலகம் இப்படியே இருக்கிறதா, இருந்ததா, அல்லது இருந்திடுமா? இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க கூடிய ஒரு நிலை உலகத்தை குறித்த விவாதங்கள். அதில் சொல்லப்படுகிறதாவது:

1. உண்டான ஒவ்வொன்றிற்கும் ஒரு நோக்கம் உண்டு.
2. இந்த பிரபஞ்சம் உண்டானது
3. அப்படியானால், இந்த பிரபஞ்சத்திற்கு ஒரு நோக்கமுண்டு.

முதல் காரணம் சரிதானா? அதை பார்க்கலாம். ஒரு விஷயம் எந்த காரணமும் இல்லாமல் அப்படியே தோன்றியது என்று

சொல்வோமானால் அது ஒரு வித்தையை நம்புவதைவிட மேலான காரியமாக இருக்கும். அதற்கு குறைந்த பட்சம் வித்தை காட்டும்நபரும் ஒரு தொப்பியும் தேவை படுமே.  ஒன்றுமே இல்லாததில் இருந்து ஏதோவொன்று உருவாக கூடுமானால், ஏன் நம்மால் எல்லா நேரங்களிலும் அந்த மாதிரி பார்க்க முடிவதில்லை. இல்லை, ஒவ்வொருநாளின் அனுபவங்களும் அறிவியல் ஆதாரங்களும் முதல் காரியத்தை நிருபித்து காட்டுகிறது; ஏதோவொரு விஷயம் இருந்தால், அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

ஆனால் நமது இரண்டாவது காரணம் என்னவாக இருக்கிறது. இந்த பிரபஞ்சத்திற்கு துவக்கமுண்டா, அல்லது ஆதிமுதால இருந்துவருகிறதா? நாத்திகர்கள் இந்த பிரபஞ்சம் நித்தியமாக இருந்து வருகிறது என்பதை முன்வைக்கிறார்கள். இந்த பிரபஞ்சம் அப்படியே தானாக, தொன்றியிருக்கிறதாம்.

முதலில், தெர்மோடைனமிக்ஸின் இரண்டாவது விதையை பார்க்கலாம்.

இந்த பிரபஞ்சமானது கொஞ்சம் கொஞ்சமாக பயன்பாட்டின் ஆற்றலை இழந்து வருவதாக கூறுகிறது. இதுதான் கவனிக்க படவேண்டிய ஒன்று.

இந்த பிரபஞ்சம் ஆதிமுதால இருந்து வருகிறது என்றால், இப்பவே இது பயன்பாட்டின் ஆற்றலை முழுவதுமாக இழந்திருக்க வேண்டும். இரண்டாவது விதி சொல்கிறது இந்த பிரபஞ்சத்திற்கு ஒரு துவக்கம்

இருக்கிறது. இந்த காரியம் இதற்கு பின்வந்த விஞ்ஞான கண்டுபிடிப்புகளால் பெரிதும் நிருபணமாக்கப்பட்டிருகிறது. 1915ல் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் சமநிலையை பற்றிய பொதுவான கொள்கையை முன்வைத்தார். இந்த காரியம் பிரபஞ்சத்தின் கடந்த கால வரலாற்றை அர்த்தமுள்ள விதத்தில் முதன்முதலில் பேசும்படி வழிவகுத்தது. அடுத்து, அலெக்ஸ்சாண்டர் பிரைட்மேன் மற்றும் ஜியோர்ஜஸ் லேமைற்றி, இருவரும் ஐன்ஸ்டீனின் சூத்திரத்தை கையாண்டனர், இப்பிரபஞ்சம் விரிவடைந்துகொண்டிருக்கிறது என்று கண்டறிந்தனர். அடுத்து, 1929ல் எட்வின் ஹப்பிள் தொலைவில் உள்ள விண் திரள்களில் இருந்து வரும் சிவப்பொளியை கணக்கிட முயன்றார். இந்த ஆதாரங்கள் அனைத்தும் இந்த பிரபஞ்சம் விரிவடைந்து கொண்டிருப்பதை நிருபிப்பதோடு, நிச்சயம் இதை கடந்த காலத்தில் ஒரு துவக்கம் உண்டாயிருக்கிறது என்பதையும் எடுத்து கூறுகிறது. இவை கற்பனைக்கு எட்டாத விதமான, அசைக்க முடியாத கண்டுபிடிப்பாக இருக்கிறது.

எப்படியிருந்தாலும், எல்லாரும் பிரபஞ்சத்தின் இந்த காரியத்தை ஏற்ப்பதில்லை. எனவே இது நெடுங்காலத்திற்கு முன்பு உதித்த கருத்துக்களுக்கு முந்தின காரியம் அல்ல. ஆனால் ஒன்றன் பின் ஒன்றாக மற்ற கருத்துகள் சோதனையில் நிற்க முடியாமல் போனது. சமீபத்தில் தான், மூன்று அண்ட ஆராய்ச்சியாளர்களான, அர்விந்த்போர்டி, ஆலன் குத் மற்றும் அலெக்ஸ்சாண்டர் வில்லேன்கின்,

நிருபித்திருகிரார்கள் இந்த பிரபஞ்சமானது, தோராயமாக, கடந்த காலத்தில் இருந்து விரிவடைந்து கொண்டிருக்கிறது, அது நித்தியமாக இருந்து வருவது இல்லை, ஆனால் அதற்கு ஒரு நிலையான துவக்கம் இருக்கிறது என்கிறார்கள். இது பலதரப்பட்ட நிலைகளுக்கு பொருந்துவதாக இருக்கிறது, ஒருவேளை அப்படியும் இருக்க வாய்ப்புண்டு.

அதாவது கடந்த கால பிரபஞ்சத்தின் நிகல்கிகளை விஞ்ஞானத்தால் மறைந்து வைக்க முடியவில்லை. தப்பிக்க வழியே இல்லை. அண்டத்தின் துவக்கத்தை பற்றிய காரியங்களை எதிர்கொண்டாக வேண்டும். எந்த ஒரு மாதிரிக்கும் நிச்சயம் ஒரு துவக்கம் இருக்கும், நிலையான மாதிரியை போலதான் அதுவும் இருக்கும்.

இது நியாயமானதா இருக்கிறது, அதாவது இந்த இரண்டு காரியங்களும் உண்மையென தோன்றுகிறது. இதன் அர்த்தம் என்னவென்றால் இதனுடைய தீர்வு சரியானதுதான்: இந்த பிரபஞ்சத்திற்கு ஒரு நோக்கம் இருக்கிறது. இந்த பிரபஞ்சம் தானாக தோன்றியிருக்க வாய்ப்பில்லை, அப்படியானால் காலம் சமயத்திற்கு அப்பாற்பட்ட ஒன்று இருப்பது உறுதியாகிறது.

**ஆன்கர்பெர்க்:** சரி, நேயர்களே, நீங்கள் இந்த வீடியோ கிளிப்பை முழுமையாக பார்க்கவிரும்பினால், Dr. கிரேகின் வலைதளத்தை அனுகிடுங்கள் reasonablefaith.org. சரி, பில், இப்ப நீங்க அண்டத்தை பற்றிய விவாதத்தில் சொல்லபப்ட்டிருக்கும் மூன்று முக்கிய

குறிப்புகளுடன் துவங்கும்படியாக விரும்புகிறேன், தேவன் இருக்கிறார் என்பதற்கு இந்த எளிமையான விவாதங்கள் எப்படி வலுவான ஆதாரமாக இருக்கிறதென்று விளக்கிடுங்கள்.

**கிரேக்**:..இந்த விவாதம் எளிமையாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. உதாரணம் ஒன்று என்னவென்றால் ஒவ்வொன்றின் துவக்கத்திற்கும் ஒரு காரணம் உண்டு. இரண்டாவது இந்த பிரபஞ்சத்தம் நிலைபெற்றிருப்பது. இந்த இரண்டு காரியங்களில் இருந்து உருவான, மூன்றாவது, காரணம், இந்த பிரபஞ்சத்திற்கு ஒரு காரணம் உண்டு. இப்போது யார் வேண்டுமானாலும் பிரபஞ்சத்தை உண்டாக்கியது யார் என்று ஆராய்ந்திட முடியும், மேலும் இதை வலியுறுத்தும் பலவித இறையியல் குறிப்புகளும் விஞ்ஞான ஆதாரங்களும் நம்மத்தியில் இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** சரி. முதல் காரணத்தையும் அதை ஆதரிக்கும் காரணங்களையும் எங்களுக்கு சொல்லுங்கள்.

**கிரேக்**:..முதல் காரியம், உங்களுக்கு நினைவிருக்கிறதா, ஒவ்வொன்றின் துவக்கத்திற்கும் ஒரு காரணம் இருக்கிறது. இது வெளிப்படையாக தெரிகிற காரியம் என்று நினைக்கிறேன், ஆனால் இதை ஆதரிக்கு மூன்று காரணங்களை உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். முதல் காரணம் ஒன்றுமில்லாததில் இருந்து எதுவும் தோன்ற முடியாது. ஒன்றும் இல்லாத, வெற்றிடத்தில் இருந்து வராது.

இந்த பிரபஞ்சம் ஒன்றுமில்லாததில் இருந்து, வெற்றிடத்தில் உண்டானால், அது மாய வித்தையை விட மோசமாக இருக்கும். வித்தைகளை நாம் நிராகரித்தால், ஒன்றும் இல்லாத நிலையில் இருந்து பூமி உண்டானது என்ற கருத்தையும் நான் ஏற்றுகொள்ள முடியாது.

சரி, சிலசமயங்களில் நாத்திகர்கள் சொல்வார்கள், “குவாண்டம் இயற்பியலின் படி வெற்றிடத்தில் ஒரு காரியம் உண்டாக வாய்ப்பிருப்பதாக சொல்கிறது. சீரான் நிலைபாடிகளின் மூலம் வெற்றிடத்தில் கூட சப் அட்டாமிக்  காரணிகள் உருவாக வாய்ப்பிருக்கிறது என்பார்கள்.” ஆனா, ஜான், இது உண்மையில் அறிவியலை தவறாக பிரபளிக்கும் செயலாகும். குவாண்டம் வேக்கம் என்பது இவர்கள் நினைப்பது போல வெறுமையான வெற்றிடம் அல்ல. குவாண்டம் வேக்கம் என்பது ஒன்றுமே இல்லாத நிலை கிடையாது. அது ஆற்றல்கள் சுழலும் கடல் போன்றது, இயற்பியல் விதிகளால் ஆளப்படும் ஒருவித அழுத்தமான நிலையை குறிக்கிறது. ஒன்றுமே இல்லாத நிலை அல்ல. எனவே ஒன்றுமில்லாததில் இருந்து உலகம் உண்டானது என்கிறவர்கள் அறிவியலில் இருக்கும் உண்மைகளை திசை திருப்புகிறார்கள்.  நத்திங் என்ற ஆங்கில வார்த்தை உலகமே மறுதலிக்கும் ஒரு வாக்கியம் - அதற்கு அர்த்தம் எதுவுமே இல்லை. அப்படின்னா இந்த உலகம் ஒன்றுமில்லாததில் இருந்து தோன்றியது என்றால்,  பிரபஞ்சம் தோன்றும் முன்பு எதுவே இல்லை என்று

அர்த்தமாகும், அங்க எதுவுமே இல்லை என்றாகும். இல்ல, எதுவுமே இல்லாத நிலை இருந்து இந்த பிரபஞ்சம் உண்டாகவில்லையே. அதனால இதுவரைக்கும் சொல்லபடுகிற விதம் பிரபஞ்சம் ஒன்றுமில்லாததில் இருந்து உண்டானது, என்ற கருத்து, என்னை பொறுத்தவரையில், அது, வித்தையை விட மோசமானது. அதனால முதல் காரணத்தை விளக்குவதற்கு இது சிறந்த காரணம் என்று நினைக்கிறேன்.

ஒவ்வொன்றின் துவக்கத்திற்கும் ஒரு காரணம் இருக்கிறது என்பதை உறுதிபடுத்தும் இரண்டாவது காரியம் என்னவென்றால் எந்த உந்துதலும் இல்லாமல் இரு விஷயம் தோன்றியிருந்தால், ஒன்றுமில்லாததில் இருந்து, வந்தது என்றால் அது எல்லாவற்றிக்கும் பொருந்துவதாக இருக்கலாமே எல்லாம் ஒன்றுமில்லாததிலிருந்து உருவாகிடலாமே, வெறுமையில் இருந்து. ஏன் பைசைக்கிள் மற்ற ரூட் பீர் அப்பறம் மற்ற விஷயங்கள் எல்லாம் ஒன்றுமில்லாத நிலையில், இருந்து உருவாவதில்லை? ஏன் பிரபஞ்சம் மட்டும்தான் ஒன்றுமில்லாத நிலையில் இருந்து வெற்றிடத்தில், உருவாக முடியுமா? அதனால பிரபஞ்சம் ஒன்றுமில்லாத நிலை இருந்து வெறுமையில் இருந்து உண்டானதை ஒப்புகொண்டால் எல்லாவற்றிலும் அப்படி நடக்கலாமே. ஆனா நிச்சயமா அப்படி நடக்க வாய்ப்பில்லை. அது தவறு.

மூன்றாவது காரணம் என்னவென்றால் இந்த காரியம், அதாவது ஒவ்வொன்றின் துவக்கத்திற்கு ஒரு காரணம் உண்டு, இது உலகளாவிய விதத்தில் அறிவியல் ஆதாரங்களாலும் பொதுவான அனுபவங்களாலும் சொதிக்கப்பட்டிருக்கிறது அதில் பிழையில்லை. இந்த ஆதாரத்தைத்தான் அறிவியல் ஆர்வலர்களுக்கு ஏற்ப்புடையாத காணப்படுகிறது. அனுபவ ரீதியாக நம்மிடம் வலுவான ஆதாரங்கள் இருக்கிறது அதாவது உண்டாக்கப்பட்ட ஒவ்வொன்றின் துவக்கத்திற்கும் ஒரு காரணர் இருக்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட் ,பில் ,2 தற்காப்பு ஆதாரங்களில் தத்துவ 2 அறிவ 2 மார்க்கத்தின் விவாதமும்ியல் சார்ந்த விவாதங்களுக்கு இருக்கிறதுகுறிப்பாக இந்த பிரபஞ்சம் நிலையாக இருப்பதை , அதில் ஓரிரு சித்தாந்தவாத விவாதங்களை பற்றி .பற்றியது .சொல்லுங்கள்

**கிரேக்**:..எண்ணிக்கைக்கு அடங்காத காரியங்கள் இருக்க வாய்ப்பில்லை என்று சொல்லக்கூடிய விவாதத்தின் முதல் காரியத்திற்கு சொல்லப்படும் விளக்கம். அதாவது, உண்மையில் எண்ணிக்கைக்கு அடங்காதது என்றால் என்ன? சரி, எண்ணிக்கைக்கு அடங்கியவை எண்ணிக்கைக்கு அடங்காதவை என்று கணித மேதைகள் வரையறுத்து கூறுகின்றனர். எண்ணிக்கைக்கு உட்படாதவை என்பது தொடர்ந்து போய்கொண்டே இருப்பவை அதற்கு முடிவே இல்லை, இதுதான் இறுதி என்று சொல்வதற்கு இல்லை. மாறாக,

எண்ணிக்கைக்குள் அடங்குகிறவை, முடிவுடைய எண்ணிக்கை. அதற்கு ஒரு எல்லை இருக்கிறது. அது ஏற்க்கனவே முடிவுற்றது. சரி, கடந்த காலத்திற்கு துவக்கம் இல்லையென்றால், இன்றைக்கு வரைக்கும் எண்ணிக்கைக்கு அடங்காத காரியங்கள் நடந்துகொண்டே தானே இருந்திருக்கும். ஆனால் கணிதமேதைகள் கூறுகிறார்கள் எண்ணிக்கைக்கு அடங்கியவை என்று சொல்வது பலவிதமான கருத்துக்களை எடுத்து சொல்கிறதாக கானபப்டுகிறது. உதாரணமாக, முடிவற்ற நிலையிருந்து முடிவற்ற ஒன்றை களித்தாள் என்ன வரும்? எனவே, கணித ரீதியாக, கருத்து வேறுபாட்டை உண்டாக்கும் பதில் கிடைக்கும். அதாவது இந்த எண்ணிக்கை அனைத்தும் மனதின் தோன்றுதல்கள், அது உண்மையாக இருக்கும் ஒரு காரியமல்ல. ஆகவே, கடந்த காலத்தின் காரியங்கள் அனைத்தும் மனதின் கற்பனைகள் அல்ல என்பதால், என்னென்ன காரியங்கள் நடந்திருக்கிறது என்பது தெரிகிறது, எனவே, இப்படியிருக்கிறபடியால், இந்த பிரபஞ்சத்திற்கு ஒரு துவக்கம் இருக்கிறது.

இரண்டாவது சித்தாந்த விவாதமானது நிலையான அளவற்ற நிலையோடு ஒன்றன் பின் ஒன்றை இணைப்பது சாத்தியமல்ல என்பதின் அடிப்படையில் இருக்கிறது. இது சிலவேளைகளில் அளவற்ற எண்ணிக்கையை கணக்கிடுவது கடினம் என்று சொல்லப்படுகிறது. அளவற்ற நிலையை ஒருபோதும் அளவிட முடியாது, ஏன்னா ஒரு நிலையை அடைவதற்கு முன்பு அதில் இன்னும் சிலது

சேர்ந்துகொண்டே இருக்கும். ஆனா உங்களால அந்த நிலையை கணக்கிட முடியாவிட்டால், எப்படி அளவற்ற நிலையை தலைகீழாக கணக்கிடுவீர்கள்? இது உண்மையில் முட்டாள் தனம்தான்.

உதாரணமாக, சூரியனை இரண்டு கிரகங்கள் சுற்றுவதாக கற்பனை செய்யுங்கள், ஒன்று மற்றொன்றைவிட இரண்டு மடங்கு அதிகமாக சுற்றுகிறது. எவ்வளவு நீண்டு சுற்றுகிறதோ, அவ்வளவாய் இரண்டினுடைய சுழற்சி எண்ணிக்கையில் வித்தியாசம் உண்டாகும்: இரண்டிற்கு ஒன்று, நான்கிற்கு இரண்டு, எட்டிற்கு நான்கு, என்று, இருக்கும். உண்மையில், எவ்வளவு அதிகமாய் சுழற்கிறதோ, அவ்வளவு அதிகமாய் மாறுபாடு அதிகரிக்கும், இறுதியில் கணக்கிட முடியாமல் போகும். இதை இப்ப இப்படி பாருங்க, நித்தியமாக அது சுழன்று கொண்டே இருப்பதாக கற்பனை செய்திடுங்கள். எது அதிகமான முறை சுற்றிகொண்டிருக்கும்? சரி, கணிதத்தின் படியாக விடையை பார்த்தால், இரண்டும் சமமாக இருக்கும் - அது எண்ணிக்கைக்கு அடங்காத எண். இது கொஞ்சம் வித்தியாசமா இருக்குல்ல. எவ்வளவு அதிகமா சுற்றுகிறதோ, அவ்வளவு அதிகமாக மாறுபாடுகள் உண்டாகும். அப்படின்னா எண்ணிக்கைக்கு அப்பாற்பட்ட நிலையில் இருந்து சுற்றிகொண்டே இருப்பதால் எப்படி இரண்டினுடைய எண்களும் ஒன்றாக முடியும்?

இந்த மாதிரியான கருத்துகள் அனைத்தும் எண்ணிக்கைக்கு அப்பாற்பட்ட நிலை இருக்காது என்றும், நிலையான ஒரு துவக்கம்

இருக்கும் என்று சொல்கிறது. அப்படி யானால், பிரபஞ்சத்திற்கு ஒரு துவக்கம் இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இதில் இரண்டு தத்துவ வாதங்கள் இருக்கிறது, மேலும் இரண்டு அறிவியல் விவாதங்களும் இருப்பதாக சொன்னீர்கள்.

**கிரேக்**:..ஆமா. இருபதாம் நூற்றாண்டின் நிகழ்வின் போதும், இயற்பியலில் ஒரு மாற்றம் உண்டானது மேலும் எதிர்பாராத திருப்பது அறிவியல் நிருபனங்களில் உண்டானது பிரபஞ்சம் நித்தியமாக இருப்பது கிடையாது, இதன் துவக்கம் சுமார் பதினான்கு பில்லியன் ஆண்டுகளுக்கு முன்புதான் உண்டாகியிருகிறது என்று கணக்கிடப்பட்டது. இந்த வஞ்ஞான நிருபணங்கள் அனைத்தும் பிரபஞ்சத்தின் விரிவாக்கத்தில் இருந்து பெறப்பட்டது. ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் தனது புதிய படைப்பான புவியீர்ப்பு கொள்கையை, சமநிலையை பற்றிய பொதுவான கொள்கையை, 1917ல் பிரபஞ்சம் முழுவதற்கு அப்பியாசப்படுத்தி பார்த்தார், அது வரவேற்க முடியாத ஒன்றை கண்டறிந்தது. அதில் என்ன தெரிந்தது என்றால் இந்த பிரபஞ்சமானது ஏதோ ஆதிமுதலாய், நித்தியமாக இருக்கும் ஒன்றல்ல. அண்டசராசரமானது விரிவான நிலையாகவோ அல்லது சுருங்கின நிலையாகவோ இருந்திருக்கலாம் என்று கருதப்பட்டது. இந்த தீர்வை எப்படி கையாளுவது என்று ஐன்ஸ்டீனுக்கு தெரியவில்லை. அதனால்

அவர் பிரபஞ்சம் ஆதிமுதலாக இருக்கிறது என்று சொல்வதற்க்கு ஏற்றார் போல சூத்திரங்களை மாற்றியமைத்தார்.

சரி, 1920களில், ஐன்ஸ்டீனின் கருத்தை பயன்படுத்தி, ரஷ்ய கணிதமேதையான அலெக்ஸ்சாண்டர் பிரைட்மேனும் பெல்ஜியம் விண்வெளியாளர் ஜியோர்ஜஸ் லேமைற்றியும் சேர்ந்து அவர்கள் தனிப்பட்ட விதத்தில், விரிவடைந்து கொண்டிருக்கும் இப்பிரபஞ்சத்திற்கு ஒரு குறிப்பிட்ட துவக்கம் உண்டென்பதையும் இப்போது விரிவடைந்துகொண்டிருக்கிறது என்பதையும் நிருபித்தனர். இந்த மாதிரிகள் அனைத்தயும் பிரபஞ்சத்தின் துவக்கத்தை எடுத்துரைக்கும் பிக் பேங் கொள்கை என்று அழைக்கப்பட்டது.

இந்த பிக் பேங் கொள்கையில் மறுக்க முடியாத காரியம் என்னவென்றால் அந்த துவக்கம் தான் பிரபஞ்சத்தின் சரியான துவக்க நிலை என்று அடித்து சொல்கிறது. அந்த சமத்தில் ஆற்றல்களும் காரணிகளும் தோன்றியதோடு கூட, அதே சமயத்தில் தான் காலமும் விண்ணுலகமும் தோன்றியதாக கூறுகிறது. எனவே அந்த காலத்திற்கு அப்பாற்பட்ட நிலைக்கு விண்வெளியையும் காலத்தையும் ஆற்றல்களையும் பின்னோக்கி நகர்த்துவது சாத்தியமற்ற காரியமாக தோன்றுகிறது.

**ஆன்கர்பெர்க்:** இதை விளக்கு சொல்லும்படியாக பலூனை வைத்து உதாரணம் சொல்லுவீர்கள் அல்லவா.

கிரேக்:..இந்த மாதிரியை தவறாக புரிந்துகொள்ளாமல் இருக்கவேண்டியது அவசியம். லேமேன் பொதுவாக நினைப்பதை விட இது கொஞ்சம் வித்தியாசமா இருக்கும். ஏற்க்கனவே இருந்து வெற்றிடத்தை தான் நமது பிரபஞ்சத்தின் விரிவாக்கம் நிரப்புகிறது என்பதை இந்த காரியம் விவரிப்பதில்லை. மாறாக, இந்த மாதிரி விண்வெளியின் விரிவாக்கத்தை விளக்கி காட்டுகிறது. இதை பற்றி நீங்கள் புரிந்துகொள்ள, இப்ப ஒரு பல்லூனின் மேற்புறத்தில் சில பட்டங்கள் ஒட்டப்பட்டு இருப்பது போல கர்ப்பனை செய்திடுங்கள். சரி, இந்த பட்டங்கள் எல்லாமே நேர்த்தியாக அந்த பலூனில் ஒட்டப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் ஒட்டப்பட்டிருக்கு. ஆனா இந்த பலூன் பெரிதாகும்போது, அந்த பட்டங்கள் எல்லாம் ஆங்காங்கே விலகிவிடும் ஏன்னா இப்ப பலூன் விரிந்துகொண்டே போகிறது.

சரி, அந்த பலூனின் மேல்புறம் நமது முப்பரிமாணமுள்ள விண்வெளியை போல் இருக்கிறது. விண் திரள்கள் அனைத்தும் விண்வெளியில் ஓட்டபட்டிருக்கிறது, ஆனா விண்வெளி தன்னிலே தானே விரிவடைவதால் அவர் ஒன்றை விட்டு ஒன்று அகன்று நிற்கிறது. இதிலிருந்து நமக்கு தெரியவரும் காரியம், இந்த விரிவிடைதலின் காலத்தை நீங்கள் கணக்கிட்டால், ஒவ்வொரு விண்மீன் திரள்களும் அருகில் நெருங்கி வர நெருங்கி வர இறுதியாக அவை அனைத்தும் சுருங்கி பிரபஞ்சம் உண்டாவதற்கு முன்பு இருந்து நிலைக்கு நம்மை கொண்டுபோய் நிறுத்திடும் என்பது சாத்தியமான

ஒன்று. எனவே விண்வெளியின் துவக்கம், காலம், சமயம் ஆற்றலின் துவக்கத்தை பிக் பேங் நிகழ்வு என்கிறோம்.

பலதரப்பட்ட நவீன கால வளர்ச்சியில் ஏற்ப்பட்ட முன்னேற்றத்தால் இயற்பியல் கொள்கை ஆராய்சிகள் மூலம் சுமார் 100 வருடங்களுக்கு மேலாக இந்த பிரபஞ்சத்தின் துவக்கத்தை பற்றி துல்லியமாக கணித்து கொண்டிருக்கின்றனர். உண்மையில், 2003ம் வருடம், மூன்று முன்னணி அண்டசாத்திர ஆராய்ச்சியாளர்கள், அர்விந்த்போர்டி, ஆலன் குத், மற்றும் அலெக்ஸ்சாண்டர் வில்லன்கின், அண்டத்தின் விரிவடைதலில் காணப்படுகிற பிரபஞ்சமானது நிச்சயம் ஆதிமுதலாக இருப்பதாக அல்லாமல் அவற்றிற்கும் கணக்கிடக்கூடிய காலத்திற்கு முன்புள்ள துவக்கம் இருக்கிறது என்கிறார்கள். போர்டி - குத்- வில்லேன்கின் கொள்கைப்படி, நிச்சயம் விண்வெளி கால சமயம் என்பது நித்தியத்திற்கு ஏற்றதாக இல்லாமல் அது ஒரு வரையரைக்கு உட்பட்டதாக இருக்குமென்றே கூறுகின்றனர். அந்த வரையறைதான் பிரபஞ்சத்தின் துவக்கமாக இருந்தால், அப்போதுதான் பிரபஞ்சத்தின் துவக்கம் உண்டாகியிருக்கும். இதுவரைக்கும் விவரிக்கப்படாத கொள்கைகள் அந்த வரையறைக்கு வெளியில் ஏதோவொரு காரியம் இருக்கிறது என்பதை எடுத்து சொல்வதாக இருந்தால், அப்ப, வில்லேன்கின் கூறுகிறார், அதுதான் பிரபஞ்சத்தின் துவக்கமாக அமைந்திடும். இதில் பிரபஞ்சம் நித்தியமாக இருந்து வருகிறது என்ற கருத்து எடுத்துகொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது.

ஆகவே வில்லேன்கின் இதை குறித்து முன்னறிந்து எழுதியிருக்கிறார். அவர் என்ன சொல்கிறார் என்றால்: ஒரு விவாதம் தான் காரணம் தேடும் நபரை திருப்தி படுத்துகிறது, காரணத்தை நாடாத நபரை திருப்தி படுத்துவது ஆதாரங்கள். இப்ப சரியான ஆதாரங்கள் இருக்க, பிரபஞ்சத்திற்கு நித்திய நிலை இருக்க சாத்தியமிருகிறது என்கிற திரைக்கு பின் ஒளிந்து நிற்க அண்டஆராய்ச்சியாளர்களுக்கு வாய்ப்பில்லை. தப்பிக்க வழியில்லை. அண்டத்தின் துவக்கத்தை பற்றிய தர்க்கங்களை அவர்கள் நேரிட்டாக வேண்டும்."

**ஆன்கர்பெர்க்:** சரி, நீங்க என்ன சொல்றீங்க, ஒரு தனிமனிதன் எல்லாவிதமான கொள்கைகளையும் கேட்க்கிறான் நீங்க சொல்றதை எதிர்க்கும் காரியங்களும் அதில் இருக்கலாம். ஆனா நூறாண்டுகளுக்கும் மேலாக நிலையாக இருப்பதும், மற்ற எல்லா கொள்கைகளையும் தகர்த்தெறிந்து தொர்க்கடித்தும் நிலையாக இருப்பது பிரபஞ்சத்திற்கு துவக்கம் உண்டு என்ற நிலை.

**கிரேக்**:..அது முற்றிலும் உண்மைதான் 20ம் நூற்றாண்டின் வரலாற்றில் பிரபஞ்சத்தின் யதார்த்த துவக்கத்தை பற்றி சொல்லத் தவறிய பலவித கொள்கைகளின் அணிவகுப்பை அண்ட சாஸ்திரம் கண்டிருக்கிறது. நிலையான உறுதியான மாதிரிகள், வெற்றிடத்தின் தாக்கம் என்ற மாதிரி, அசைவை பற்றிய மாதிரிகள், கம்பி மாதிரிகள். மேலும் மேலும் பல கொள்கைகள் துவக்கத்தை நிராகரித்து செல்ல முயன்றனர், துவக்கத்தை பற்றிய யதார்த்த நிலை பற்றிய விஞ்ஞானிகள்

சமூகத்தினரின் மனதில் திருப்பதி படுத்த கூடிய ரீதியில் அவைகளின் நிருபணங்கள் போதுமானதாக இல்லை.

**ஆன்கர்பெர்க்:** ஆமா. அது ரொம்ப முக்கியம். இரண்டாவது அறிவியல் விவாதம் பிரபஞ்சத்தின் தெர்மோடைனமிக்சை சார்ந்திருக்கிறது. அதை சொலுங்கள்.

**கிரேக்**:..ஆமா. ஒரு அறிவியல் நிரூபணம் போதாது என்பதற்காக, நமக்கு தெர்மோடைனமிக்ஸ் விதியிலிருந்து இரண்டாவது நிரூபணம் கிடைத்தது. தெர்மோடைனமிக்ஸ் விதி என்ன சொல்கிறது என்றால் நெருக்கமான வடிவம், அதாவது எந்த வொரு அமைப்பிலும் அதில் ஆற்றல் செலுத்தப்படுவது கிடையாது, மாறாக அதன் ஆற்றல் முடியும் போது தானாக அது ஒரு முடிவினை பெறும்படி தள்ளப்படுகிறது. சரி, நாத்திகத்தில், இந்த பிரபஞ்சமானது ஒரு பெரிய ராட்சத அமைப்பு என்கின்றனர் ஏன்னென்றால் வெளிப்புறத்தில் இருந்து இதற்கு ஆற்றல் அளிக்கப்படுவதில்லை. அதற்கு என்ன அர்த்தம் என்றால், போதுமான காலகட்டத்தில், இந்த பூமியானது ஏதாவது ஒரு விதத்தில் வெப்ப மண்டலத்தின் தாக்கம் காரணமாக மாண்டுவிடும். சரி, குறிப்பிட்ட கால கட்டத்தில் அப்படி நடக்க வாய்ப்பிருக்கிறது என்றால், ஏன் இவ்வளவு காலங்கலாகியும் இதுவரைக்கும் பிரபஞ்சத்தில் அந்த மாதிரி எதுவும் நடக்காமல் இருக்கிறது? இந்த பிரபஞ்சமானது இருண்டிருக்கவேண்டும், கரைந்து, ஜீவனற்று, குளிர்ந்திருகனும்- ஆனா அப்படியில்லை. இந்த நிலை பிரபஞ்சம் ஆதிமுதலாக இல்லை என்பதை குறிக்கிறது, இதற்கு

ஆரம்ப நிலையாக ஆற்றல் சக்தி அளிக்கப்பட எண்ணிக்கைக்கு அடங்கியுள்ள சில காலங்களுக்கு முன்பாகத்தான் துவங்கினது என்பதையும், அதிலிருந்து இது படர்ந்து விரிந்துகொண்டே இருக்கிறது என்பதையும் குறிக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், அடுத்து மூன்றாவது காரணம், உங்களுடைய தீர்வு?

கிரேக்:..இப்ப நம்மிடம் சிறந்த சித்தாந்த விவாதங்களும் அறிவியல் நிருபனங்களும் இரண்டாம் காரணத்திற்கு திறவுகோலாக இருக்கிறது, இந்த பிரபஞ்சத்திற்கு ஒரு துவக்கம் இருக்கிறது. இந்த இரண்டு காரியங்களை பின்தொடர்ந்து வருகிற காரியம், என்னவென்றால், இந்த பிரபஞ்சத்தை உண்டாக்கிய ஒருவர் இருக்கிறார்.

சரி, இந்த பிரபஞ்சத்தை உண்டாக்கியது உருவாக்கியது யார்? சரி, நாம இதுவரை சொன்னா பலவிதமான காரியங்களின் தன்மையை வெளிபடுத்துகிறது. இதை உண்டாக்கியவர் உருவாக்கப்பட்டவராக இருக்கமுடியாது, ஏன்னா அதற்கும் மேல உண்டாக்கப்பட்ட எதுவும் காணபபடவில்லை. அதனால இந்த பிரபஞ்சத்தை உண்டாக்கியவர் சிருஷ்டிக்கப்பட்ட நிலையில் இல்லாதவர். அதாவது இதினால் காலங்களும் சமயங்களும் உண்டானதால் அவர் அதற்கு அப்பாற்பட்டவராக இருக்கணும். ஆகவே அவர் இயற்கையான ஒருவராக இல்லாமல் பிரபஞ்சத்தின் காரியங்களுக்கு அப்பாற்பட்ட ஒருவராகத்தான் இருக்கணும். எல்லாவற்றைற்றிற்கும் உயிரோட்டம்

அளித்து ஆற்றல் காலம் சமயம் விண்வெளி அனைத்தையும் நிஜமாக மாற்றுகிற கற்பனைக்கு அப்பாற்பட்ட வல்லமை முதலாவதாக இருக்கிறது.

இறுதியாக, நா சொல்லுகிறேன், இவர் நம்பத்தகாத விதமாக இருக்கிறவர். நித்தியமாக நிரந்தரமாக இருக்கும் ஒருவரால் இந்த தற்காலிகமான தாக்கம் பெறப்படுவதை எந்த மாதிரி நீங்கள் விளக்கி சொல்லமுடியும்? அந்த காரணர் நபராக இல்லாமல் ஒரு தொழிநுட்பப நிலையாக இருந்தால், காரணமும் கிடைத்துவிடும் அதோடு, அதனுடைய தாக்கத்தின் விளைவு நமக்கு கிடைக்கும். உதாரணாமாக, தண்ணீர் உறையும் நிலை சீரோ டிகிரிக்கு கீழான வெப்ப நிலையென்று இருக்கிறது, ஒருவேளை கடந்த நித்திய காலத்தில் வெப்பநிலை சீரோ டிகிரீ செல்சியசுக்கு கீழாக இருந்தால், நித்திய காலத்திலிருந்து சுற்றியிருக்கிற தண்ணீர் அனைத்தும் உறைந்த நிலையில் தான் இருக்கும். குறிப்பிட்ட காலத்திற்குள் தண்ணீர் உறைந்துபோகும்படி செய்வது என்பது சாத்தியமற்ற விஷயமாகும்.

நித்தியமான நிரந்தரமான ஒன்றிலிருந்து ஒரு தற்காலிகமான ஒன்றை தாக்கத்தோடு துவங்க அந்த காரணி ஒரு நபராக இருந்தால் சாத்தியமாகும்; சுய சித்தம் நிறைந்த ஒருவராக இருக்கணும்; அப்படி இருந்தால்தான் எந்த வித முன் ஏற்ப்பாடுகளும் இல்லாமல் காலத்தின் கட்டாயம் இல்லாமல் சுதந்திரமாக எதையும் உருவாக்க முடியும். உதாரணமாக, நித்தியமாக உட்கார்ந்திருக்கும் நபர் சுலபமாக எழும்பி

நிற்க முடியும். ஆகவே நித்தியமாக இருக்கும் நிலையில் இருந்துதான் தற்காலிக நிலை உருவாவது சாத்தியமாகும். ஆகவே இந்த பிரபஞ்சத்தின் துவக்கத்தை பற்றிய ஆய்வில் அதை தெரிந்துகொண்டது மட்டுமல்ல அதன் சிருஷ்டிகரிடமும் நம்மை நடத்தி வருகிறது.

இந்த விவாதங்கள் எல்லாம் நமக்கு ஒரு நம்பிக்கையின் அடித்தளத்தை உண்டாக்குகிறது என்று நான் நம்புகிறேன் அதாவது ஒன்றுமில்லாத, ஆரம்பம் இல்லாத, காலங்களுக்கு அப்பாற்பட்ட, விண்வெளிகள் இல்லாத, எதுவும் இல்லாத நிலையிலும் இந்த பிரபஞ்சத்தின் சிருஷ்டிகர் இருந்திருக்கிறார் - அவரைத்தான் எல்லாரும் தேவன் என்று அழைக்கிறார்கள்.

**ஆன்கர்பெர்க்:** சரி, நேயர்களே, இதை பற்றி நீங்கள் சிந்திக்க விரும்புகிறேன், அடுத்த வாரம் நிகழ்ச்சியை தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன், ஏன்னா தேவன் இருக்கிறார் என்பதை பற்றி சொல்லும்போது பெரும்பாலும் தோன்றுகிற சில முக்கிய பிரச்சனைகளை பற்றி நாம் பார்க்க இருக்கிறோம். அதுதான் தீமை என்னும் பிரச்சனை. எப்படி பூரண அன்பும் சர்வ வல்லமையும் கொண்ட தேவன் இப்படி, இன்றைக்கு, தீமையும் உபத்திரவமும் பூமியில் இருக்க அனுமதித்திருக்கிறார்? அடுத்த வாரம் Dr கிரேகின் பதிகளை கேட்க ஆவலாக காத்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.